Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 345

திங்கட்கிழமை 06 நவம்பர் 2023

ஐப்பசி 20 ஆம் நாள் – வள்ளு

## தமிழரசு மாநாடு ஜனவரி 28 இல்!

### மத்திய குழுவில் திகதி குறிப்பு பணவசூலிப்புக்கும் தீர்மானம்

வவுனியா, நவ. 6
மிக நீண்டகாலமாக இழுபறிப்பட்டு வந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநாட்டை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் திகதி திருகோணமலையில் நடத்துவதற்கு நேற்றுத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாநாட்டுக்கு முன்னதாக »10

### சீனப் பிரதிநிதிகளுக்கு நேற்று தடல்புடல் வரவேற்பு



# வடக்கு மக்களுக்கு வீடமைக்கிறோம்!!!

### சீனத் தூதுவர் உறுதிமொழி

### சகோதரர்களே! என தமிழ் மக்களையும் விளித்தார்

**வவுனியா, நவம்பர் 6**

**வடக்கு மாகாண மக்களுக்கு சீன அரசாங்கம் வீடமைத்துக் கொடுக்கவுள்ளதாக இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் வவுனியாவில் வைத்து நேற்றுத் தெரிவித்தார்.** »11



### பருத்தித்துறைக் கடலில்

## விபத்துக்குள்ளான பலநாள் படகு மீட்பு!

யாழ்ப்பாணம், நவ. 6
ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்ட பலநாள் படகு பருத்தித்துறைக் கடலில் மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் விபத்துக்குள்ளாகி மூழ்கும் நிலையில் காணப்பட்டது. »10

### சீனி வரி மாற்றம்:

## 100 கோடி இழப்பு

### சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 6
சீனி மீதான வரியை மாற்றியமைத்ததில் பெரும் மோசடி நடந்திருப் »11

## 'அஸ்வெசும' வாரத் திட்டத்திலிருந்த பிரதேச செயலர்கள் விலகுகின்றனர்

### பிரதேச செயலகங்களுக்கு வரவேண்டாம் என்று மக்களுக்கும் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 6
இன்று தொடக்கம் எதிர்வரும் 12ஆம் திகதி வரையில் 'அஸ்வெசும வாரம்' என்று அரசாங்கம் அறிவித்திருந்த நிலையில் அந்தப் பணிகளிலிருந்து பிரதேச செயலர்கள் விலகுவதாக நேற்று இரவு அறிவித்துள்ளனர். »11

## யாழ். இளைஞன் கொழும்பில் காயங்களுடன் சடலமாக மீட்பு!

கொழும்பு, நவ. 6
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரின் சடலம் கொழும்பு - வெள்ளவத்தை கடற்கரையில் நேற்றுக்காலை கரையொதுங்கியுள்ளது.
இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் மானிப்பாய் வீதி, தாவடி, யாழ்ப்பாணம் என்ற முகவரியை சேர்ந்த சர்வானந்தா கிருசாந்த் (வயது-28) என்று கூறப்படுகின்றது. சடலத்துடன் காணப்பட்ட அடையாள அட்டை மூலமே சடலம் இனங்காணப்பட்டுள்ளது. »10

### முகமூடிக் கொள்ளையர்களால்

## ரூ.10 லட்சம் பெறுமதியான பொருள்கள் கொள்ளை

முல்லைத்தீவு, நவ. 6
புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட தேராவில் ஏரிக்கரையில் வீட்டிலிருந்த பெண்களை கத்திமுனையில் அச்சுறுத்தி பணம், நகை மற்றும் பொருள்களை முகமூடிக்கொள்ளையர் »10

### இணுவிலில்

## வர்த்தகர் வீட்டில் 170 பவுண் திருட்டு

யாழ்ப்பாணம், நவ. 6
இணுவில், பாரதி வீதியிலுள்ள வர்த்தகரின் வீடொன்றில் 170 பவுணுக்கும் அதிகமான தங்க நகைகள் நேற்றுத் திருடப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. »10

## மட்டக்களப்புக்குப் போராடச் சென்ற பல்கலை மாணவர்கள் சிறையில்!!!

### நீதிமன்றம் பிணை வழங்கியும் பொலிஸார் சதி நடவடிக்கை

மட்டக்களப்பு, நவ. 6
மயிலத்தமடுவுக்குப் போராடச் சென்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் 5 பேரும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒருவருமாக 6 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நீதிமன்றம் பிணை வழங்கியுள்ள நிலையிலும், பொலிஸாரின் திட்டமிட்ட நடவடிக்கை காரணமாக இன்றுகாலை வரை அவர்கள் சிறையில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட் »10

## பல்கலை மாணவியிடம் பாலியல் சேட்டை

### காட்டிக்கொடுத்தது காணொலி

யாழ்ப்பாணம், நவ. 6
தனிமையில் வீதியில் செல்லும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவிகளுக்கு ஆணுறுப்பை காட்டி பாலியல் துர்நடத்தையில் »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்ஜெட்டுக்கு முன்பாக அமைச்சரவைக் கூட்டம்

கொழும்பு, நவ. 6

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் எதிர்வரும் 13ஆம் திகதி காலை விசேட அமைச்சரவைக் கூட்டம் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் கட்டாயம் பங்கேற்குமாறு அமைச்சர்களுக்கு அறிவுறுத்தப்படவுள்ளது.**

2023ஆம் நிதியாண்டுக்கான பாதீடு எதிர்வரும் 13ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

இதற்கு முன்னதாகவே அமைச்சரவைக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், பாதீட்டின் உள்ளடக்கம் உள்ளிட்ட விடயங்களுக்கு அமைச்சரவையின் அனுமதி பெறப்படவுள்ளது.

13ஆம் திகதி நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியின் வரவு - செலவுத் திட்டஉரை மாத்திரமே நடைபெறும்.

பாதீட்டு கூட்டத்தொடர் காலத்தில் தனிப்பட்ட வெளிநாட்டுப் பயணங்களை தவிர்த்துக்கொள்ளுமாறும், வாக்கெடுப்பு நேரங்களில் கட்டாயம் சபையில் இருக்குமாறும் ஆளுங் கட்சியினருக்கு ஜனாதிபதியால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-44)

SRI LANKA RUGBY

SINCE 1879

# இலங்கை ரக்பி தடை நீங்கியது

கொழும்பு, நவ. 6

உலக ரக்பி சம்மேளனம் இலங்கை ரக்பி மீது விதித்திருந்த தடையை நீக்கியுள்ளது.

ஆசிய ரக்பி சம்மேளனத்தின் தலைவர் கைஸ் அல் தலாய் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் டுபாயில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின்போதே ஆசிய ரக்பி சம்மேளனத்தின் தலைவர் பெரிஸில் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார். (ச-இ)

## இலங்கையின் கடற்பாதுகாப்பு

# மூலோபாயத் திட்ட அறிக்கை 6 மாதத்துக்குள் வழங்க பணிப்பு

கொழும்பு, நவ. 6

இலங்கையின் நிலப்பரப்பு மற்றும் கடல் எல்லைகளின் பாதுகாப்பு தொடர்பான மூலோபாயத் திட்டத்தின் முதலாவது அறிக்கையை 6 மாத காலத்துக்குள் சமர்ப்பிக்கவேண்டும் என்று தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க சம்பந்தப்பட்ட குழுவுக்குப் பணித்துள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற தேசியப் பாதுகாப்பு தொடர்பான மீளாய்வுக் கூட்டத்தின்போதே இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

நாட்டின் தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கையின் எதிர்கால பாதுகாப்பு கரிசனைகளைக் கருத்திற்கொண்டும் மூலோபாயத் திட்டத்தை வகுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அமைச்சரவையின் அனுமதியுடன் சிறப்புக் குழு அமைக்கப்பட்டது.

ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சன்ன குணதிலக்கவின் தலைமைத்துவத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இந்தக் குழுவில், ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் மற்றும் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் என 6 பேர் உள்ளடங்குகின்றனர்.

நாட்டின் எதிர்கால பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் புலனாய்வுப் பிரிவுகளை வலுப்படுத்தல் ஆகிய விடயங்களை உள்ளடக்கி இந்தக் குழுவானது மூலோபாயத் திட்டத்தை வகுக்கவுள்ளது. 2030ஆம் ஆண்டை இலக்கு வைத்தே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஜனாதிபதியின் இந்தத் திட்டம் தொடர்பில் 6 மாதக் காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்க பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)

# நல்லிணக்க ஆணைக்குழு வரைவு ஆண்டிறுதிக்குள்!

கொழும்பு, நவ. 6

இந்த ஆண்டின் இறுதிக்குள் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவுக்கான இறுதி வரைவை வெளியிட எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளதாவது:-

நாட்டில் இனங்களுக்கு இடையிலான புரிதல்களை ஏற்படுத்தி நீண்டகாலமாகக் காணப்படுகின்ற முரண்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவருவதில் அரசாங்கம் என்ற வகையில் முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதன் ஓர் அங்கமாகவே உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இதன் ஊடாக இனங்களுக்கு இடையிலான முரண்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவருவதும், பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதும் இலக்காகவுள்ளது.

இந்த ஆணைக்குழுவை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளில் தற்போது அதற்கான வரைவு தயாரிக்கப்படும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வரைவை இறுதிசெய்து இந்த ஆண்டு இறுதிக்குள் சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது - என்றார். (எ-இ)



# அமைச்சுப் பதவிகளில் விரைவில் மாற்றங்கள்

## ஆலோசிக்கின்றது அரசாங்கம்

கொழும்பு, நவ. 6

அமைச்சுப் பதவி வெற்றிடங்களை நிரப்புவதன் மூலம் வலுவான அரசாங்கத்தை நிலைநிறுத்துவது தொடர்பில் அமைச்சரவை ஆலோசித்து வருகின்றது என்று அரசாங்க தகவல் அறியும் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முப்பது அமைச்சுப் பதவிகளை வழங்க முடியும் என்றாலும் இதுவரை இருபது அமைச்சரவை அமைச்சுப் பதவிகளே வழங்கப்பட்டுள்ளன.

மீதமுள்ள 10 அமைச்சுப் பதவிகள் தயார் நிலையில் உள்ளன. அமைச்சுப் பதவிகளை எதிர்பார்த்துள்ள பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் பலர் ஏற்கனவே ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளதால் அவர்களுக்கு இந்த அமைச்சுகளை வழங்க ஏற்பாடுகள் இடம்பெற்று வருகிறது.

அமைச்சுப் பதவிகளை நிரப்பும்போது தற்போதுள்ள அமைச்சுப் பதவிகளில் சில திருத்தங்கள் இடம்பெற வாய்ப்புள்ளது என்றும் அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

கடந்தமுறை இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்தின் போது பொதுஜன பெரமுனவில் எவருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கவில்லையென அந்தக் கட்சியினர் கடும் அதிருப்தியை வெளியிட்டிருந்த பின்புலத்திலேயே மீண்டும் அமைச்சரவை மாற்றத்தை மேற்கொள்ள ஆலோசிக்கப்பட்டு வருகிறது. (எ-இ)

# தேர்தல் நடவடிக்கைக்கு விசேட குழு அமைப்பு!

கொழும்பு, நவ. 6

தேர்தல் நடவடிக்கைகளுக்காக விசேட குழுவொன்றை அமைப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ளது.

தேர்தலுக்கான கூட்டணி, இட ஒதுக்கீடுகள் உள்ளிட்ட விவகாரங்களை இந்தக் குழுவே கையாளும் எனவும், இதரக் கட்சிகளுடன் பேச்சு நடத்தும் எனவும் தெரிய வருகின்றது.

2024ஆம் ஆண்டு தேர்தல் வருடமாகக் கருதப்படுகின்றது. அரசமைப்பின் பிரகாரம் 2024ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்துக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும். 2025ஆம் ஆண்டு வரை நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் இருந்தாலும், அதனை முன்கூட்டியே கலைப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது.

இதற்கிடையில் பாதீடு நிறைவேறிய பின்னர் பொதுத்தேர்தலை நடத்த ஜனாதிபதி உத்தேசித்துள்ளார் எனவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே தேர்தலை எதிர்கொள்வதற்கு பிரதான எதிர்க்கட்சி தயாராகிவருகின்றது.

அதேவேளை, அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் மாவட்ட மட்டத்திலான கூட்டங்களை நடத்தி வருகின்றது. (ம-44)

# நாடுகடத்தப்படுவதைத் தவிர்க்க 700 மில்லியன் ரூபா இலஞ்சம்!

## வழங்க முயன்ற ஹரக்கட்டா

கொழும்பு, நவ. 6

இலங்கைக்கு நாடு கடத்தப்படுவதைத் தவிர்ப்பதற்காக ஹரக்கட்டா 700 மில்லியன் ரூபாவை வழங்க முன்வந்தார் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

காலியில் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பதவியில் இருந்து என்னை நீக்குவதற்கு சிரேஷ்ட அதிகாரிகளுக்குப் பெருந்தொகைப் பணத்தை வழங்க பாதாள உலகக் குழுவினர் தயராகவுள்ளனர். ஜனாதிபதிக்கும் இந்த விடயம் தெரியும். எனக்கு இலஞ்சம் வழங்க முயன்றவர் கொல்லப்பட்டுள்ளார் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிட்ட ஆக்கிரமிப்பை உடன் நிறுத்தவேண்டும்!

## வவுனியாவில் தமிழரசுக்கட்சி போராட்டம்



**வவுனியா, நவ. 6**

**தமிழர் தாயகப்பகுதிகளில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்புகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியாவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.**

வவுனியா பழைய பேருந்து நிலையப் பகுதியில் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

வடக்கு - கிழக்கில் நிலஅபகரிப்புகள் நிறுத்தப்படவேண்டும், மயிலத்த மடுமேய்ச்சல் தரையில் ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டவிரோதக் குடியேற்றங்கள் உடன் நிறுத்தப்படவேண்டும், செட்டிகுளத்தில் கீழ்மல்வத்தோயாத் திட்டத்தின்மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ள குடியேற்றங்களை தடுத்துநிறுத்தவேண்டும், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் தீர்வுவேண்டும் இந்து ஆலயங்களுக்கு எதிரான ஆக்கிரமிப்புகள் நிறுத்தப்படவேண்டும், திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்கள் கைவிடப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தே அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன், இஸ்ரேல் - ஹமாஸ் மோதல் உடன் கைவிடப்பட வேண்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினார்கள்.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன், இரா.சாணக்கியன், தமிழரசுக் கட்சியின் செயலாளர் ப.சத்தியலிங்கம், மாவட்ட அமைப்பாளர் ந.கருணாநிதி மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் உறுப்பினர்கள் எனப் பலர் போராட்டத்தில் கலந்துகொண்டனர். (ச-110)

அம்பாறை – கஞ்சிகுடிச்சாறு

## துயிலுமில்லத்தில் துப்புரவுப் பணிகள்

அம்பாறை, நவ. 6

அம்பாறை மாவட்டத்திலுள்ள கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலுமில்லம் நேற்றுமுன் தினம் துப்புரவு செய்யப்பட்டது.

மாவீரர்தினம் எதிர்வரும் 27ஆம் திகதி நாடெங்கிலுமுள்ள துயிலுமில்லங்களில் நினைவுகூரப்படவுள்ள நிலையில், இதை முன்னிட்டு துயிலுமில்லங்கள் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. இதன்படி அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலுமில்லம் நேற்றுமுன் தினம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், மாவீரர் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் இந்தத் துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டனர். (ம-100)



## இ.போ.ச. பேருந்து காரைநகரில் விபத்து

யாழ்ப்பாணம், நவ. 6

இலங்கை போக்குவரத்துச்சபையின் காரைநகர் கிளைக்குச் சொந்தமான 786 வழித்தடப் பேருந்து வலந்தலையை அண்மித்த மதவடி பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

களபூமியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பேருந்தே நேற்றுக் காலை 7.30 மணியளவில் விபத்துக்குள்ளானது.

விபத்தில் தெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

# சங்கானையில் கொள்ளை: முறையிட்டும் பயனில்லை

சண்டிலிப்பாய் - சங்கானைக்கு இடையேயான பகுதிகளில் வழிப்பறிச் சம்பவங்களும், கொள்ளைச் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிட்டும் எந்தப் பயனும் இல்லை என்று பொதுமக்கள் குற்றஞ் சாட்டியுள்ள்னர்.

வங்கியில் பணத்தை வைப்பிலிடுவதற்காகச் சென்ற அரிசி ஆலையொன்றின் உரிமையாளரிடமிருந்து கடந்த வியாழக்கிழமை சங்கிலி கொள்ளையிடப்பட்டது. மோட்டார்சைக்கிளில் வந்த இருவரே இந்தக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர். இதற்கு முன்னரும் பெண்கள் உட்பட பலரிடமிருந்து பணம்பொருள்கள்கொள்ளையடிக்கப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதுதொடர்பில் பொலிஸாரிடம் முறையிட்ட போதிலும் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. எனவே இந்த முறைப்பாடு கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும், சண்டிலிப்பாய்-சங்கானை இடையேயான வீதியில் பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தீவிர படுத்தவேண்டும் என்றும் பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர். (ம-26)



## ப தினம் தெரியுமோ?

ஊர் ரண்டுபட்டால் கூத்தாடிக்குத்தான் கொண்டாட்டம். எங்கடையாக்கள் தங்களுக்குள்ள 'நீ பெரிசோ? நான் பெரிசோ?' எண்டு ஆளையாள் குத்தி முறிஞ்சு கொண்டிருக்க, அதை வடிவாப் பாவிச்சு தங்கட காரியங்களை சிங்கள ஆக்கள் திறமாய் செய்துகொண்டு போறாங்கள். பிறகு குய்யோ முறையோ எண்டு கலவாய்க்குருவி மாதிரி கத்திக்கொண்டிருக்கத்தான் முடியுமே தவிர, வேற ஒரு ஆணியும் பிடுங்க ஏலாது.

ஒரு லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு எண்டதொரு திட்டத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்தினது. ஒவ்வொரு மாவட்டத்தில இருந்தும் அப்பிடி வேலையில்லாமல் இருக்கிறவையின்ர விவரங்களை லிஸ்ட் போட்டு, அதை உரியவை உறுதிப்படுத்தி அனுப்ப வேணும். அதில கட்டாயம் வேலைவாய்ப்புத் தேவைப்படுற ஆக்களை இனங்கண்டு, அவையின்ர படிப்புக்கு ஏத்த வேலையைக் குடுக்கிறதுதான் அரசாங்கத்தின்ர பிளான். உண்மையா இது ஒரு நல்ல திட்டம் தான். ஆனால் எந்தத் திட்டம் வந்தாலும் அதில எங்களுக்கு என்ன லாபம் இருக்கு? எண்டுதான் எங்கட 'அரசியல் வியாதியள்' பாக்கிறவை. அப்பிடி லாபம் எண்டாத்தான் அதில இறங்குவினம். இந்த ஒரு லட்சம் வேலைவாய்ப்புத்திட்டத்தில தாங்கள் குடுக்கிற லிஸ்ட்டில் உள்ளவைக்கு அரசாங்கம் வேலை குடுத்தால், அதைக்காட்டி வாக்குகளை கொத்தா அள்ளலாம் எண்டு 'அரசியல் வியாதியளுக்கு' வடிவாத் தெரியும். இந்தச் சான்ஸைத் தவறவிட அவை தயாரில்லை. ஆனால் பிரச்சினை என்னெண்டால், அரசாங்கத்துக்கு முட்டுக்குடுத்துக் கொண்டிருந்த யாழ்ப்பாணத்து அரசியல்வியாதியள் ரண்டு பேரும் ஏட்டிக்குப் போட்டியாத்தான் அலுவல் பார்த்துக் கொண்டிருந்தவை. அப்பிடிக்கொத்தவை எப்பிடி இந்த வேலைவாய்ப்பு விசயத்தில கதைச்சுப் பேசி லிஸ்ட் தயாரிப்பினம்?

"நான்தான் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத்தலைவர். அதால நான் அனுப்பிற லிஸ்ட்தான் போக வேணும்" எண்டு ஒருத்தரும், "நான் தான் இஞ்சத்த அமைச்சர். அப்ப நான் போடுற லிஸ்டைத்தான் அனுப்போணும்" எண்டு மற்றவரும் மாறி மாறி அதிகாரிமாரின்ர தலையளை உருட்டத் தொடங்கியிருக்கினம். அதால என்ன முடிவு எடுக்கிறது எண்டு அதிகாரிமாருக்கும் குழப்பம். "ஏறச்சொன்னால் எருதுக்கு கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்" எண்டமாதிரி ஆர் சொன்னதைச் செய்தாலும் மற்ற ஆள் கோபப்படும். அதால பாதிப்பு தங்களுக்குத்தான் எண்டதால இந்த ஒரு லட்சம் வேலைவாய்ப்புத் திட்டப் பட்டியல் விசயத்தில அதிகாரிமார் கொஞ்சம் அடக்கித்தான் வாசிச்சவை. இப்பிடி அரசியல்வியாதியளின்ர முட்டிமோதல் முடியமுதலே, அந்தத் திட்டத்துக்கான முடிவுத் திகதியும் வந்திட்டுது. அதால இஞ்சயிருந்து ஒரு லட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தில யாழ்ப்பாணத்து ஆக்களுக்கு இடமில்லாமல் போட்டுது.

அதால வாற விளைவுகளை இப்ப அனுபவிக்கத் தொடங்கியிருக்கிறம். இப்ப கம்பஸுக்கு, உந்தத் திட்டத்தில எடுபட்ட சிங்கள ஆக்கள் வேலைக்கு வரப் போயினம். அரசாங்கம் கேக்கேக்க அடிபட்டுப் போட்டு, 'இப்ப சிங்களவன் எங்கட இடத்துக்கு வேலைக்கு வந்திட்டான், எங்கட ஆக்களுக்கு இடமில்லாமல் போட்டுது' எண்டு மாய்மாலக் கண்ணீர் வடிக்கிறது சரியில்லைக் கண்டியளோ.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இன்றைய (06.11.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?**

விடை : ................................................

தினம் ஒரு பரிசு 33

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................
தே.அ.இல : ........................................
தொ.இலக்கம் : ........................................

மெகா பரிசு

**2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?**

விடை : ................................................

**2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?**

விடை : ................................................

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................
தே.அ.இல : ........................................
தொ.இலக்கம் : ........................................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக ( தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

## இன்றைய ஆட்டம்

இலங்கை — பங்களாதேஷ்

Sri Lanka Cricket — Bangladesh Cricket Board

இடம் : டெல்லி
நேரம்: பி.ப. 2.00

# தோல்வி இல்லாமல் இந்தியா வெற்றிநடை



உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்திலும் அபார வெற்றி பெற்று, தோற்கடிக்க முடியாத அணியாக வலம்வந்து கொண்டிருக்கின்றது இந்தியா.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு அமர்க்களமான ஆரம்பத்தை அமைத்துக் கொடுத்தார் ரோகித். வெறும் 6 ஓவர்களில் 60 ஓட்டங்களைத் தொட்டது இந்தியா. 24 பந்துகளில் 40 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார் ரோகித். கில் 23 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். அதன்பின்னர் இணைப்பாட்டம் அமைத்த கோலியும், ஸ்ரேயாஸும் மிகமிக நிதானமாகவும் நேர்த்தியாகவும் தென்னாபிரிக்காவின் பந்து வீச்சை எதிர்கொண்டனர். இருவரும் அரைச்சதம் கடந்தனர். அணி 227 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது 77 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ஸ்ரேயாஸ். ராகுல், ஸ்ரேயாஸ் இருவரும் பெரிதாகப் பிரகாசிக்கவில்லை. மறுமுனையில் கோலியின் உலகசாதனைச் சதம் பதிவானது. ஒருநாள் ஆட்டங்களில் 49 சதங்களைக் கடந்து அதிக சதங்களைப்பெற்ற சச்சினின் சாதனையை அவர் சமன்செய்தார். ஜடேஜா கடைசிக்கட்டத்தில் அதிரடிகாட்டி 29 ஓட்டங்களைக் குவித்தார்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணியின் ஆரம்ப வீரர் குயின்டன் டி ஹொக்கை போல்ட் முறையில் வீழ்த்தினார் சிராஜ். அதன்பின்னர் ஜடேஜாவின் சுழல் வேட்டை ஆரம்பமானது. பவுமா, கிளாசன், மில்லர் என முக்கியமான வீரர்களையெல்லாம் வரிசையாக வெளியேற்றி நேற்றைய ஆட்டத்தில் 5 விக்கெட்களை வீழ்த்தினார் ஜடேஜா. மத்திய வரிசையின் பெரும் நம்பிக்கையான மார்க்கம் சமியால் வீழ்த்தப்பட்டார். இதையடுத்து 83 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 243 ஓட்டங்களால் தோல்வியடைந்தது தென்னாபிரிக்கா. (ம)

# கோலியின் பிறந்தநாள் மைதானத்தில் கோலாகலம்




இந்திய அணியின் நட்சத்திரவீரர் விராட் கோலியின் பிறந்த தினத்தை பல்லாயிரம் ரசிகர்கள் நேற்று மைதானத்தில் வெகு சிறப்பாகவும், கோலாகலமாகவும் கொண்டாடினார்கள்.

ஆட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த சம நேரத்தில் மைதானத்தின் பல பாகங்களிலும் கோலிக்காக ரசிகர்களால் கேக் வெட்டப்பட்டது. கோலி களமிறங்கியபோது, கோலியை வாழ்த்தி பிறந்தநாள் பாடலும் ரசிகர்களால் இசைக்கப்பட்டது. ஆட்டம் முடிவடைந்த பின்னர் வண்ணமய மின் விளக்குகளால் சாகசமும் ஈடன் கார்டன் மைதானத்தில் இடம்பெற்றது. (ம)

## தினம் ஒரு பரிசு நாள் 31 இன் வெற்றியாளர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வி.சதுர்ஷன் | - | மன்னார் | ஜெ.அபிஷா | - | நட்டாங்கண்டல் |
| ப.பிரித்திகா | - | கோப்பாய் | ம.மதுசன் | - | சாவகச்சேரி |
| வ.சங்கரன் | - | வட்டுக்கோட்டை | பி.ரதிதேவி | - | வவுனியா |
| ஜெ.பிரசன்னா | - | ஆனைக்கோட்டை | சா.ஜெயதேவி | - | புதுக்குடியிருப்பு |
| பா.பலபத்மன் | - | பருத்தித்துறை | தி.ரூபசொரூபன் | - | விசுவமடு |
| த.றக்ஷனா | - | மீசாலை | இ.டினோஜ் | - | ஆனந்தபுரம் |
| [illegible] | - | [illegible] | நி.யானுஜா | - | பூநகரி |
| [illegible] | - | [illegible] | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



**வடமாகாண மரநடுகை மாதம்** நவம்பர் 2023

"ஒரு மரம் பட்டுப்போகுமாக இருந்தால் பட்ட அந்த மரத்துக்குப் பதிலாக அவ்விடத்தில் இன்னொரு மரத்தை நடுங்கள்."

- கரோலஸ் இலினேயஸ் (தாவர வகைப்பாட்டியலாளர்)

# ஊட்டச்சத்தும் நாட்டமில்லா அரசும்!

உலகளாவிய ரீதியில் ஊட்டச்சத்துக் குறைபாடுகளைக் கொண்ட முதல் பத்து நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. இதன்படி, இந்தத் தீவில் 2.3 மில்லியன் குழந்தைகள் உட்பட சுமார் 5.7 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்று பகிரங்கப்படுத்தி சிவப்பு எச்சரிக்கையை விடுத்திருக்கின்றது யுனிசெப். யுனிசெப் ஒன்றும் ஐக்கிய மக்கள் சக்தியோ அல்லது ஜே.வி.பியோ அல்ல. அதன் எச்சரிக்கை அரசியல் கருதாதது, பொதுமைப்பாடானது. இன்னும் சொல்லப்போனால், சர்வதேச அளவுகோலுக்கும், நியமங்களுக்கும் உட்பட்டே இந்த எச்சரிக்கையை அந்த அமைப்பு விடுத்திருக்கின்றது.

2019ஆம் ஆண்டிலிருந்து பொருளாதார நெருக்கடி இலங்கையை கொஞ்சம்கொஞ்சமாக விழுங்க ஆரம்பித்தது. ஒரு மானை, கொஞ்சம்கொஞ்சமாக ஆட்கொண்டு அதன் மூச்சை நிறுத்தும் மலைப்பாம்புபோல இலங்கையின் பொருளாதாரம், வலிந்து ஏற்படுத்தப்பட்ட முரண்பிறழ் நிலைகளால் வலுவிழந்து வந்தது. இந்தப் பொருண்மியப் பேரிடர், வறிய குடும்பங்களையே இரையாக்கும் என்பதும், அதன் விளைவாக ஊட்டச்சத்துக் குறைபாடு நாட்டு மக்களிடத்திலும், சிறார்களிடத்திலும் தலைவிரித்தாடும் என்பதும் கட்டியம் கூறப்பட்ட விடயங்களே. ஆதலால், யுனிசெப் அமைப்பின் இந்த எச்சரிக்கை – தகவல் புருவங்களை உயர்த்தச் செய்யுமளவுக்கு ஆச்சரியமான விடயம் இல்லை. ஆனால், அரசாங்கத்தின் கையாலாகத்தனம்தான் இங்கு பட்டவர்த்தனமாகின்றது.

இலங்கையில் ஊட்டச்சத்தை மேம்படுத்துவதும், பலப்படுத்துவதும் அவ்வளவு கடினமான காரியமல்ல. 'ஓர் அரசாங்கமாகக்' குறைந்தபட்சத் திட்டமிடல்களுடன், குறைந்தகால அவகாசத்தில் மிகமிக இலாவகமாகச் செய்யத்தகுந்த விடயமிது. மேற்கத்தேய நாடுகளின் இறக்குமதியைச் சார்ந்திருக்காது, உள்நாட்டுக் கட்டமைப்புகள் மூலமாகவே இலங்கையர்களின் ஊட்டச்சத்தை பலமடங்கு மேம்படுத்தலாம். பால், மீன், இறைச்சி, முட்டை, தானியங்கள் என ஊட்டச்சத்தை வாரிக்குவிக்கும் விடயதானங்களில் இலங்கை தன்னிறைவு காண்பதெல்லாம் செயற்கரிய செயல்களில்லை. ஆனால், அரசாங்கத்தின் அசண்டையீனமும், அரசியல் இலாபத்தை நோக்காகக்கொண்ட செயற்பாடுகளும்தான் இலங்கையர்களை அனுதினம் நின்றுகொல்கின்றது.

பால் உற்பத்தியில் தன்னிறைவு காண்பதற்குப் பதிலாக, மேய்ச்சல்தரைகளை ஆக்கிரமித்து, அபகரிக்கும் கபடத்தனத்தையே சிங்கள பேரினவாதம் மேற்கொள்கின்றது. மயிலத்த மடுவில் தமிழ்ப் பண்ணையாளர்களின் கால்நடைகளுக்கும், அந்தக் கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரைகளுக்கும் இன்று நடக்கும் காட்சிகள் உலகின் எந்தநாட்டிலும் இடம்பெறாத கோரச்சாட்சிகளே. மீன்பிடிக்கும் இதேநிலைதான். அத்துமீறிய இந்திய இழுவைப்படகுகளே இலங்கையின் மீன்வளத்தை அல்லும்பகலும் சூறையாடிக் கொண்டிருக்கின்றன. இதுபோதாதென்று இப்போது சீனாவின் நேரடித் தலையீடும் இலங்கைக் கடற்பிராந்தியங்களில் அனுமதிக்கப்பட்டு, வல்லாதிக்க மோதலுக்கு வழிசெய்யப்பட்டிருக்கின்றது. தானிய உற்பத்தியைப் பலப்படுத்தினால் அதன் இலவச இணைப்பாக, கோழித் தீவனங்களும் தானாகக் கிடைக்கும். ஆனால், 'இறக்குமதியே கதி' என்பதுதான் இந்த விடயத்தில் இலங்கையின் நிலை. தானியங்களும் இல்லை, கோழித்தீவனங்களும் இல்லை. இரட்டிப்புப் பின்னடைவாக இந்தியாவில் இருந்து இறக்குமதியாகின்றது முட்டை.

இந்த இழிநிலைக் கொள்கையால் எவ்வாறு பொருளாதாரம் மேம்படும்? எவ்வாறு ஊட்டச்சத்து மேம்படும்? உள்நாட்டுப் பொருளாதாரக் கட்டமைப்பைப் (தன்னிறைவுப் பொருளாதாரம்) பலப்படுத்த அரசாங்கத்திடம் எந்தத் திட்டமும் இல்லை. மாறிமாறி ஆட்சிக்குவரும் இந்தச் சிந்தனை வறட்சியுடைய அரசாங்கங்களால் இலங்கை மக்கள் ஊட்டச்சத்துக் குறைபாட்டை மட்டுமல்ல பட்டினிச்சாவையும் தான் எதிர்கொள்வார்கள், இது மிகைப்படுத்தப்பட்ட கூற்றல்ல. இலங்கைக்கு மேலாக வட்டமிட்ட பிணந்தின்னிக் கழுகு, இப்போது சற்றுத் தொலைவில் பறக்கத் தலைப்பட்டிருக்கின்றது. என்றால் அதற்கு இந்தியா வழங்கிய தாராள உதவிகள்தான் முதன்மைக் காரணம். எப்போதும் இந்தியா காப்பாற்றிக் கொண்டிருக்கும் என்றில்லை. இந்தியாவுக்கு அதுதான் வேலையும் இல்லை. எனவே தற்சார்புப் பொருளாதாரத்தில் எமக்கான ஊட்டச்சத்துள்ள உணவை உற்பத்தி செய்யும் வழிவகைகளுக்கு அரசாங்கம் ஆதரவளிப்பதன் மூலமே நிரந்தரமாக இந்தப் பிரச்சினையில் இருந்து நாடு விடுபடமுடியும்.




# 69 ஆயிரம் பேருக்கு டெங்குத் தொற்று!




கொழும்பு, நவ. 6

**இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் பதிவான டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 69 ஆயிரத்தைக் கடந்துள்ளது என்று தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.**

இந்த ஆண்டில் இதுவரையான காலப் பகுதியில் மொத்தமாக 69 ஆயிரத்து 231 டெங்குத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான டெங்குத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த மாதத்தில் 4 ஆயிரத்து 10 டெங்குத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர் என்றும், இந்த மாதத்தில் இன்றுவரை 738 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் தொற்றுநோயியல் பிரிவு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் இந்த வருடத்தில் இதுவரையில் டெங்குத் தொற்றுக்குள்ளான 39 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் அந்த அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

டெங்குத் தொற்றைத் தடுக்கும் வகையில், தங்கள் சுற்றுப்புறங்களை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் நுளம்புகள் பெருகும் இடங்களை அழிக்க வேண்டும் எனவும் சுகாதாரத்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர். (எ-இ)

# 23 சதவீதமானோர் நீரிழிவால் பாதிப்பு

நாட்டில் 23 சதவீதமானோர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இலங்கை உட்சுரப்பியல் நிபுணர்கள் கல்லூரியில் மேற்கொண்ட ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நீரிழிவு நோயால் ஆபத்தில் உள்ள முதல் 10 நாடுகளுக்குள் இலங்கையும் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கொழும்புப் பல்கலைக் கழகத்தின் மருத்துவத்துறைப் போராசிரியர் மருத்துவர் பிரசாத் கட்டுலந்த, 2006ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இலங்கையின் சனத்தொகையின் 10 வீதத்தினர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது. தற்போது அது 23 வீதமாக உயர்ந்துள்ளது.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான நீரிழிவு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் - என்றார். (எ-இ)

# சு.க.வில் மீண்டும் சந்திரிகா இணைவு

கொழும்பு, நவ. 6

சுதந்திரக் கட்சியை மீளக் கட்டியெழுப்புவதற்காக அந்தக் கட்சியுடன் இணைந்து 'தற்காலிக அரசியல்' பயணத்தை முன்னெடுக்க முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தீர்மானித்துள்ளார் என அரசியல் வட்டாரங்களில் தகவல் வெளியாகியுள்ளது.

சுதந்திரக் கட்சியின் செயற்பாட்டாளர்களும், ஆதரவாளர்களும் விடுத்தகோரிக்கையின் பிரகாரமே சந்திரிகா இந்த முடிவை எடுத்துள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. எனினும், இது தொடர்பில் சந்திரிகா தரப்பில் இருந்து இன்னும் உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்படவில்லை. (ம-44)

**நாளை** 07.11.2023 செவ்வாய்க்கிழமை ஐப்பசி 21

சுபநேரம் : 10.35 - 12.05
ராகுகாலம் : 03.05 - 04.35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1987 உடன்பாட்டை நடைமுறைப்படுத்துக

## இலங்கையை வலியுறுத்தவேண்டுமென சச்சிதானந்தன் இந்தியாவுக்குக் கடிதம்

கொழும்பு, நவ. 6

**இலங்கைப் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க நீங்கள் பொருளாதார உதவி, கடன், நன்கொடை வழங்குவதைவிட்டு இலங்கை-இந்தியாவுக்கு இடையிலான 1987ஆம் ஆண்டு உடன்பாட்டை முழுமையாக நிறைவேற்றுமாறு அழுத்தம் கொடுத்தால் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து இலங்கையை மீட்டெடுக்கலாமென இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.**

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது:- 1964, 1974, 1976, 1987 ஆகிய நான்கு இலங்கை- இந்திய உடன்பாடுகள். இவற்றுள் முதல் மூன்றும் முழுமையாக நிறைவேறிய உடன்பாடுகள். இலங்கைப் பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு நன்மை என்பதால் இவை மூன்றையும் நிறைவேற்ற இலங்கை முழுமையாக ஒத்துழைத்தது.

இலங்கைப் பெரும்பான்மைச் சிங்கள புத்த மக்களுக்குத் தீமை என்றும் இலங்கைச் சைவத் தமிழ் மக்களுக்கு நன்மை என்றும் தவறாகக் கருதிய இலங்கை அரசாங்கம் 1987 உடன்பாட்டை நிறைவேற்றவில்லை. இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு இதுவும் ஒருகாரணம். இலங்கைச் சைவத் தமிழ் மக்களின் மரபு வழித் தாயத்தைத் தனி மாகாணம் ஆக்கி, உடன்பாட்டிலுள்ளவற்றை நிறைவேற்றினால் இலங்கையானது பொருளாதார நெருக்கடியிலிருந்து படிப்படியாக விலகும்.

யாழ்.மாவட்டம் காங்கேசன்துறையிலிருந்து சென்னைக்கு வானூர்தியும், நாகப்பட்டினத்துக்குக் கப்பலும் இந்திய அரசின் பெருமுயற்சியால் தமிழ்ச்சைவ மக்களுக்குக் கிடைத்த பெரிய பேறு. இந்திய அரசுக்கு நாங்கள் நன்றி சொல்கிறோம். இலங்கையிலிருந்து வருகின்ற சைவத்தமிழ் வழிபாட்டுப் பயணிகள் இலங்கை ரூபாவை இந்திய ரூபாவாக மாற்றுவதற்கு இறங்குதுறைகளில் வங்கி வசதிகள் செய்துதருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

யாழ்ப்பாணத்தில் இந்திய அரசின் கலாசார மண்டபம் பெரியபேறு. இந்திய அரசுக்குச் சைவத் தமிழ் மக்களின் நெஞ்சார்ந்த நன்றி. அந்த மண்டபம் முறையாகப் பயனற்று இருக்கின்றதே. இந்தியாவின் பாரதிய வித்தியா பவன் அமைப்பு அந்த மண்டபத்தைப் பொறுப்பேற்று கலாசாரப் பண்பாட்டுப் பயிற்சி வகுப்புகளை லண்டனில் நடத்துவதுபோல் யாழ்ப்பாணத்திலும் நடத்த ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது. (ம-66)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் அதிகப்படியான உற்சாகம் பெருக்கெடுக்கும். குடும்பத்தினரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**இடபம்:** மனதில் அவ்வப்போது குழப்பங்கள் தோன்றி மறையும். குடும்பத்தினரின் உடல்நலனில் கவனம் தேவை. தொடங்கும் காரியம் இழுபறியானாலும் அனுகூலமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் வந்து சேரும். உங்கள் ஆலோசனைக்கு மரியாதை கிடைக்கும். மகிழ்ச்சியான செய்தி கிடைக்க வாய்ப்புள்ளது. தொல்லைகள் குறையும். இலாபமும் அதிகரிக்கும்.

**கடகம்:** குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில் அவ்வப்போது தேவையற்ற குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். பொறுமை அவசியம். செலவுகள் ஏற்படலாம்.

**சிம்மம்:** நாள் முழுவதும் உற்சாகமாக இருப்பீர்கள். புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கன்னி:** அவசரத் தேவைகளுக்காகப் பணம் வந்த வண்ணம் இருக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். கடன் வாங்காமல் சமாளித்துவிடுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**துலாம்:** தொடங்கும் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால், குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகளில் அவசரம் வேண்டாம். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மாறும்.

**விருச்சிகம் :** பஎதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும் சாதகமாக முடிந்து விடும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும். பிள்ளைகள் வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**தனுசு:** குடும்பத்தில் தேவையற்ற சலசலப்பு ஏற்பட்டாலும், பாதிப்பு இல்லாதபடிக்கு சமயோசிதமாக சமாளித்து விடுவீர்கள். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும்.

**மகரம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடும் போது கூடுதல் கவனம் தேவை. உறவுகளால் அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தொடங்குவது நல்லது. எதிரிகளால் மறைமுக ஆதாயம் உண்டாகும். நண்பர்கள் வகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புண்டு.

**மீனம்:** செயல்கள் அனைத்தும் அனுகூலமாக முடியும். துணிச்சலுடன் முடிவெடுக்கும் திறன் அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

## தொழிற்பயிற்சி கற்கைகள் விண்ணப்பங்கள் கோரல்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையால் 2023ஆம் ஆண்டுக்கான என்.வி.கியூ. சான்றிதழ் முழுநேர கற்கை நெறிகள் அடுத்தவருடம் முதலாம் திகதி அனைத்துப் பயிற்சி நிலையங்களிலும் ஆரம்பிக்கவுள்ளன.

அதன்படி தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், கணினி படவடிமைப்பாளர், முன்பள்ளி ஆசிரியர், மோட்டார் சைக்கிள் திருத்துநர், மின்னிணைப்பாளர், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், அலுமினியம் பொருத்துநர், அறைபராமரிப்பாளர், உணவு மற்றும் குடிபானம் பரிமாறுபவர், வெதுப்பாளர், சமையலாளர், வரவேற்பாளர், கணினிவன்பொருள்திருத்துநர், கணினி பிரயோக உதவியாளர், குழந்தை பராமரிப்பாளர், நீர்க்குழாய் பொருத்துநர், உதவி கணிய அளவியலாளர் போன்ற கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கற்கவிரும்புவோர் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம், 4ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல. 12/4 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் அல்லது எமது பிரதேச தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ளமுடியும்.

விண்ணப்பங்களை 0212227949, 0212211793, 0212057047, 0212262550 மற்றும் 0707161955 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளமுடியும் என இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை மேலும் அறிவித்துள்ளது. (ச)

## 'கற்பனை ஓடங்கள்' நூல் வெளியீடு



மன்னார், நவ. 6

பேசாலை அபிவிருத்திக் குழுவின் உறுப்பினரும் கவிஞருமாகிய ஜோன் பெல்கான் பறுநாந்தின் எண்ணத்தில் உருவான 'கற்பனை ஓடங்கள்' எனும் நூல் வெளியீடு நிகழ்வு பேசாலை சென்.மேரிஸ் வித்தியாலய சிசிலியா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

பேசாலை அபிவிருத்திக்குழுத் தலைவரும் அதிபருமான எஸ். இராஜேஸ்வரன் பச்சேக் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ். அமலமரித்தியாகிகள் குழுமத்தின் மாகாணத் தலைவர் அருட்பணி செ.போல் ஜெயந்தன் பச்சேக் அடிகளார் முதன்மை விருந்தினராகப் பங்கேற்றார். கௌரவ விருந்தினராக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கலந்துகொண்டார். (ச-60)



## விளையாட்டுப் பொறுப்பாளர் பாப்பாவின் தந்தை மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 6

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளராக இருந்த பாப்பாவின் தந்தை காலமாகியுள்ளார்.

கண்டி வீதியில் மாவட்டச் செயலகத்துக்கு அண்மையில் இவர் வசித்து வந்த நிலையில், உடல்நலக் குறைவு காரணமாகக் கடந்த வெள்ளிக்கிழமை காலமானார். இவரது இறுதிக்கிரியை நேற்று முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றது. (எ-100)

## கடலட்டைபிடித்த நால்வர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 6

யாழ்ப்பாணம் - குருநகர் கடற்பகுதியில் அனுமதியின்றி சட்டவிரோதமாக கடலட்டை பிடித்த நால்வர் நேற்று காலை கைதுசெய்யப்பட்டனர்.

மண்டைதீவு கடற்படையால் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட நால்வரும் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களை சட்டநடவடிக்கைக்குட்படுத்தும் பொறிமுறைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கிரிக்கெட்சபை கூண்டோடு விலகவேண்டும்

## ரசிகர்கள் நேற்றுமுன்தினம் போராட்டம் பதவியைத் துறந்தார் செயலாளர்

**கொழும்பு, நவ. 6**

**இலங்கைக் கிரிக்கெட்சபையின் அதிகாரப்பீடங்கள், தெரிவுக்குழுவினர் அனைவரும் கூண்டோடு பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி கிரிக்கெட்சபையின் தலைமை அலுவலகத்துக்கு முன்பாக ரசிகர்கள் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

உலகக்கிண்ணத் தொடரில் இலங்கைஅணி மிகமோசமான பெறுபேற்றை வெளிப்படுத்தியது. உச்சக்கட்டமாக 55 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து இந்தியாவிடம் 302 ஓட்டங்களால் மண்கௌவியது. இதனால், இலங்கை கிரிக்கெட் அணிக்கும், சபைக்கும் எதிராக ரசிகர்கள் கடும் அதிருப்தியிலும் கோபத்திலும் உள்ளனர். இந்த நிலையிலேயே இலங்கைக் கிரிக்கெட்சபையின் அதிகாரப் பீடங்கள், தெரிவுக்குழுவினர் அனைவரும் கூண்டோடு பதவிவிலக வேண்டும் என்று வலியுறுத்தி கிரிக்கெட்சபையின் தலைமை அலுவலகத்துக்கு முன்பாக நேற்றுப் பலர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் பதற்றநிலையை அடுத்து பொலிஸார் குவிக்கப்பட்டு இலங்கைக் கிரிக்கெட்சபையின் அலுவலகத்துக்குப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக் கிரிக்கெட்சபைக்கு எதிரான எதிர்ப்பையடுத்து, அதன் செயலாளர் மொகான் டி சில்வா நேற்றுப் பதவியில் இருந்து விலகினார்.

முன்னதாக, இலங்கைக் கிரிக்கெட்சபையின் செயற்குழு மற்றும் தெரிவுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் பதவி விலகவேண்டும் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்திருந்தார். (ம)


**தேவை**

முதியோர் / நோயாளர் பராமரிப்பு சேவை நிறுவனத்திற்கு ஆண் / பெண் பராமரிப்பாளர்கள் தேவை. **074 1999 100**

**தேவை**

முதியோர், நோயாளர் பராமரிப்புக்கு அனுபவமுள்ளவர்கள் தேவை. தங்குமிடம், உணவு இலவசம்.
சம்பளம் (30,000 - 75,000/=)
**0777 126 860 / 59**
கொழும்பு, யாழ்ப்பாணம்.


தமிழ் ஆக்கத் திறமை

## பற்றிக்ஸின் கீர்த்தனன் தேசியத்தில் முதலிடம்

யாழ்ப்பாணம், நவ. 6

தமிழ் ஆக்கத்திறன் வெளிப்பாட்டுப் போட்டியில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன் தேசிய ரீதியில் முதலாமிடம் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். கல்வியமைச்சின் தமிழ்மொழி அலகால் 'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' எனும் தொனிப்பொருளில் இந்தப் போட்டி கொழும்பு விவேகானந்தா கல்லூரியில் அண்மையில் நடத்தப்பட்டது.

இதில் கீழ்ப்பிரிவில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மாணவனான பாலச்சந்திரன் கீர்த்தனன் தேசிய ரீதியில் முதலிடம் பெற்றுள்ளார். (ச)




**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



Best Wishes

04.11.2023 அன்று இலங்கை அதிபர் சேவை III ற்கான நியமனத்தைப் பெற்ற எமது பாடசாலை ஆசிரியர்

**திரு.யோகேஸ்வரன் விமலன்**
(B.A.Dip.in.Phy.Edu, PGDE, M.Ed)

அவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பதவி உயர்வுகள் பெற்று சேவையில் சிறந்து விளங்க வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்-
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/மிருசுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை,
மிருசுவில் வடக்கு.

(CR 40938) A-1



# வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 06 . 02 . 1949



மறைவு 08 . 10 . 2023

கடந்த 08.10.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

## அமரர் கந்தையா இலட்சுமணன்

**(செல்வராசா/ சாமியார் )**

ஒரு குடும்ப பாசவிளக்காய் ஒரு கூட்டுக்கிளியாக
எம்மோடு வாழ்ந்து எம்மை எல்லாம் தவிக்கவிட்டு
விண்ணுலகு புகுந்து மாதம் ஒன்று ஓடி மறைந்தாலும்
உமது நினைவுகள் எம்முடனே வாழும்

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (07.11.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

தாவடி சுதுமலை வீதி,
(தர்மலிங்கம் தூபிக்கு முன் ஒழுங்கை)
தாவடி தெற்கு, கொக்குவில்.

**குடும்பத்தினர்**



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**04.11.2023 அன்று அதிபர் நியமனத்தைப் பெற்றுக்கொண்ட எமது கல்லூரியின் ஆசிரியப் பெருந்தகைகளான**



**திரு.தங்கவேலு புஸ்பரத்தினம்**



**திரு.சிவபுண்ணியம் சிவகரன்**



**திருமதி தமிழ்ப்பிரியா சுதன்**



**திருமதி தர்ஷினி சுதாகரன்**

ஆகியோரை பணிசிறக்க மனமுவந்து வாழ்த்துவதோடு மென்மேலும் பல பதவிகளில் தடம் பதித்து பணியாற்ற கல்லூரி சமூகம் சார்பாக இறை ஆசிகள் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

வாழ்த்துவோர்: வட்டமேசை
யா/டிறிபேக்கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

பிறப்பு 08 . 06 . 1953



இறப்பு 02 . 11 . 2023

### கணேசையா இராஜரத்தினம் (சாம்பு)

யாழ். தெல்லிப்பழை வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கணேசையா இராஜரத்தினம் அவர்கள் கடந்த (02.11.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணேசையா நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், கருணேஸ்வரி (குஞ்சு) அவர்களின் பாசமிகு கணவரும், சச்சிதானந்தசிவம், கமலாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், துர்க்காதேவி, யாழினி, யதுசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பகீரதன் அவர்களின் அன்பு மாமனாரும், அஸ்மிதா, அக்சரா ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.11.2023 புதன்கிழமை அன்று சுவிஸில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆசாரி லேன்,
தாவடி வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 26847)A-1

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 16 . 08 . 1969



மறைவு 05 . 11 . 2023

எமது நிறுவனத்தில் கணக்காளராகக் கடமையாற்றிய

### சிவானந்தம் ஸ்ரீதர்

அவர்கள் நேற்று (05.11.2023) ஞாயிற்றுக்கிழமை காலமான செய்திகேட்டு மிகுந்த கவலையடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உரிமையாளரும், பணியாளர்களும்**

சன்றாமெஸ் இண்டஸ்றீஸ் பிறவேட் லிமிடட்
(ZANDRA MESH INDUSTRIES (PVT) LTD)
சாறா இண்டஸ்றீஸ் பிறவேட் லிமிடட்
(SARAH INDUSTRIES (PVT) LTD)
செல்வா ஹாட்வெயார்
(SELVA HARDWARE)

No:120, Stanley Road,
Jaffna.

(CS 26851) A-1

## மரண அறிவித்தல்

மண்ணில் 25 . 01 . 1957



விண்ணில் 04 . 11 . 2023

### வெற்றிவேலு மாசிலாமணி

யாழ்ப்பாணம் கச்சேரியடியை பிறப்பிடமாகவும் இத்தாலி ஜெனோவா நகரை வசிப்பிடமாகவும் கொண்ட வெற்றிவேலு மாசிலாமணி அவர்கள் நேற்றுமுன்தினம் (04.11.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வெற்றிவேலு சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், தம்பிஜயா பூமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், சறோஜா அவர்களின் பாசமிகு கணவரும், மாலினி, கார்த்தீபன் ஆகியோரின் அருமைத் தந்தையும், இராஜ்குமார், கிளாரா ஆகியோரின் அன்பு மாமனாரும், லதீக்கன், லதீக்கா, இந்திரா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற முத்துக்குமார், அழகரத்தினம், உருத்திரசிங்கம், செல்வராசா, மற்றும் மகாலிங்கம், புவனேஸ்வரி, ஜெயக்குமாரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், இலட்சுமணர், வசந்தராணி தம்பதியின் சம்மந்தியும் பவளமலர், தவமணி, காலஞ்சென்ற சின்னத்தம்பி, பொன்னுத்துரை, பவளம் மற்றும் கமலநாதன், மனோன்மணி, செல்வராணி, சந்திரமாலா ஆகியோரின் மைத்துனரும், மகேஸ்வரன், சரஸ்வதி, காலஞ்சென்ற கந்தையா ஆகியோரின் சகலனும், இளங்கோவன், சாலினி, சுதர்சினி, இளந்திரையன், சித்திரா, சாந்தினி, ஈஸ்வரன், ஜெகதிஸ்வரன், சிறில் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், ரேணுகா, பாமினி, பார்த்தீபன், கமலறூபன், தனுசன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் காலஞ்சென்ற சந்திரகுமார், சுசீலா மற்றும் உதயகுமார், நிமலதாசன், பிரதீபா, ஜனித்தா, கவிதா, தர்னுதா ஆகியோரின் பாசமிகு மாமாவும், காலஞ்சென்ற றஞ்சன், சிறி, ஐங்கரன் மற்றும் றமேஸ்குமார், வரதராஜன், வசந்தி, நாதன், றஞ்சினி, றஞ்சனா, சாந்தா, கமலினி,தினேஸ், மேனகா, உமா, முருகா, தர்சன், சுதா, மயூரன், ஆகியோரின் மாமனாரும், அனுஷா, மயூரன், தினேஸ், கஜானி துவாரகா, சாரங்கா, கம்சி, நிசன், நிஷா, பவிதரன், இலக்கியா,துளசிகா, சந்தோஷ், பிரகாஷ், சுஜீவ், தர்மிகா, யாழினி, மதுமிதா, கஸ்மிதா, தர்மிகா, தணிகையன், ஆரபி, தாரங்கி, காருஜன், கஸ்வினி, ஜஸ்வாந், அபிஷாலினி, சுஜி, கவிஷன், கேருஜன், டிலக்சன், லக்சிகா, மிகுணன், கரணி, போலினா ஆகியோரின் பாசமிகு பேரனும், சஞ்சீவன், சாங்கிதன், மனோ ஆகியோரின் அன்புப் பாட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் Via Federico Alizeri 1/10, Genova என்னும் முகவரியிலுள்ள அவரது இல்லத்தில் வைத்திருந்து காலை 7.45 மணியளவில் 06.11.2023 திங்கட்கிழமை Via Giovanni Battista Marsano 9 தேவாலயத்தில் பிரார்த்தனை செய்த பின்னர் பூதவுடல் மயானத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:
கார்த்தீபன் - +39 334 115 8220
றாஜன் - +39 339 341 0050
ஈசன் - +39 348 099 0855

தகவல்:
குடும்பத்தினர்

(2.6)

## ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

| | |
|---|---|
| வலிகாமம் வடக்கு பிரதேசசபை | :- காங்கேசன்துறை உப அலுவலகம் |
| உரிமையாளர் பெயர் | :- வரதராசா இராஜலதன் பெண் நிருபா ஜெயலக்ஸ்மி |
| விண்ணப்பதாரர் பெயர் | :- செல்லையா வரதராஜா |
| முகவரி | :- 24.பிரம்படி லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில் |

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் காங்கேசன்துறை உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 03, தம்பதம்பி வீதி (குமாரகோயில் வீதி). ஆதன் இல. 17/7 இல் அமைந்துள்ள தெல்லிப்பளை கோவிற்பற்று வீமன்காமம் இறை "கொக்கன்" என்ற ஆதனம் சொந்தக்காரர் உரிமைகோருபவர் என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப்பதிவேட்டில பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது 14.11.2018 ஆந்திகதிய சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிஸ், சத்திய ஆணையாளர் கதிரேசு சிவசுப்பிரமணியம் அவர்கள் முகதாவில் இலக்கம் 11822 இல் அத்தாட்சிப்படுத்திய அறுதி உறுதியால் வெளிப்படுத்தப்பட்டு விண்ணப்பதாரியினால் ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் தொடர்பில் விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட உறுதியின் தாய் உறுதியான சட்டத்தரணியும் நொத்தாரிசு கதிரேசு சிவசுப்பிரமணியம் அவர்களால் 23.02.2017 ஆந் திகதிய 11082 ஆம் இலக்க பிரகடன உறுதியில் சிவானந்தன் திலக்ராஜ்குமார் மனைவி சுகன்யா பின்வருமாறு பிரகடனப்படுத்தியுள்ளார். பிரசித்த நொத்தாரிஸ் க.சிவசுப்பிரமணியம் முகதாவில் 2012.04.12ம் திகதி 8014ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதிப்படி அவரின் 2ம் பெயர்வழியின் காலஞ்சென்ற மாதாவெற்றிவேலு செல்வரத்தினம் கைம்பெண் பரமேஸ்வரி குறித்த ஆதனத்தை 2ம் பெயர்வழிக்காரர் சுகன்யாவுக்கு நன்கொடையாகக் கொடுத்திருந்தார். எனினும் குறித்த பிரதேசம் அரச படையினரின் கட்டுப்பாட்டில் இருந்ததாலும் இவ்வாதனம் ஆதியில் இருந்த படி சொரியலாய் எழுதப்பட்டதென்றும் ஆனால் அண்மையில் இவ்வாதனம் தம்மிடம் பாதுகாப்புப் படையினரால் கையளிக்கப் பட்டுள்ளதால் இதன் அயல் காணிக்காரர்களை சந்திக்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருந்தது என்றும் அயல் காணிக்காரர் களால் தரப்பட்ட ஆவணங்களில் இருந்து எமது ஆதனம் நிலஅளவையாளர் A.சந்தியாம்பிள்ளை அவர்களால் 1978.10.21ம் திகதி 309ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தின் படி துண்டு 05 நிலப்பரப்பு 04 குளி 01.0 துண்டு 06, நிலப்பரப்பு 2 குளி 06.3ஆக இரண்டும் கூடி மொத்த நிலப்பரப்பு 6 குளி 7.3 என நிந்தமான ஆதனமாக இருந்து இருந்துள்ளது என்றும் குறித்த இவ்வாதனம் நிந்தமான ஆதனமாக காணிப்பதிவகத்தில் பதிவு செய்வதற்காக இந்த உறுதியினை முடித்ததாக கூறியுள்ளார்.

மேலும் குறித்த ஆதனம் சுப்பிரமணியம் செல்லத்துரை என்பரால் அவருடைய மகன் செல்லத்துரை சேனாதிராஜாவுக்கு 1960ம் ஆண்டு நன்கொடையளிக்கப்பட்டது. எனினும் இந்த உறுதிப்பத்திரம் வலிகாமம் வடக்கில் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக தொலைந்துவிட்டது. யாழ்ப்பாணம் காணிப் பதிவகத்தில் தேடியும் அதன் பிரதியைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. செல்லத்துரை சேனாதிராஜா அவர்கள் இவ்வாதனத்தை எவருக்கும் பாரப்படுத்தாது காலமாகிவிட்டார். காலஞ்சென்ற செல்லத்துரை சேனாதிராஜா அவர்களுக்கு சாந்திக்குமார், சேனாதிராஜா ராஜ்குமார், சேனாதிராஜா ஜெயக்குமார் என 03 ஆண் பிள்ளைகள் உள்ளனர் எனவும் பின்னர் இவ்வாதனம் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் ஆகிய வேலுப்பிள்ளை சிற்றம்பலம் கணேசலிங்கம் அவர்களால் 24.01.2001 ஆந் திகதிய 69 இலக்கம் கொண்ட நன்கொடை உறுதி மூலம் அவர்களின் 2ம் பெயர்வழியின் தாயாரான காலம்சென்ற வெற்றிவேலு செல்வரத்தினம் கைம்பெண் பரமேஸ்வரி அவர்களுக்கு சேனாதிராஜா சாந்திக்குமார், சேனாதிராஜா ராஜ்குமார், சேனாதிராஜா ஜெயக்குமார் நன்கொடை அளிக்கப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம்.யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று வீமன்காமம் இறை (வலிவடக்குப் பிரதேச செயலர் பிரிவு வலி வடக்கு பிரதேசசபை பகுதி கிராம அலுவலர் பிரிவு இல 1/235) "கொக்கன்" நிலப்பரப்பு 10,1/8 இதற்கு எல்லைகள்

| | | |
|---|---|---|
| கிழக்கு | : | வேலுப்பிள்ளை நன்னித்தம்பிக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம் |
| வடக்கு | : | செல்லையா நடராசா ஐயரின் ஆதனம். |
| மேற்கு | : | வேலுப்பிள்ளை அரும்பலத்தின் ஆதனம் |
| தெற்கு | : | முருகேசு இளையதம்பியின் ஆதனமும் கையொழுங்கையும் |

இதில் சொரியலாக அரைவாசி, இது நிலஅளவையாளர் A.சந்தியாப்பிள்ளை அவர்களால் 1978.10.21 ஆந் திகதி 309ஆம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தின் படி துண்டு 05 நிலப்பரப்பு 04 குளி 01.0 எனவும் துண்டு 06 நிலப்பரப்பு 02 குளி 06.3 ஆகவும் காட்டப்பட்டுள்ளது. இவ்விரு ஆதனங்களும் ஒன்று சேர்ந்து ஒரே ஆதனமாக நிலப்பரப்பு 6 குளி 07.3 என காட்டப்பட்டுள்ளது. இது மீண்டும் நில அளவையாளர் V.தவராசா அவர்களால் 2018.05.04ஆந் திகதி 1634ஆம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 1,2,3 எனக் குறித்த படி நிலப்பரப்பு 6 குளி 7.3 என காட்டப்பட்டுள்ளது. இதில் துண்டு 02 என குறித்த ஆதனம் நிலப்பரப்பு 2 குளி 9 இதற்கு எல்லை

| | | |
|---|---|---|
| கிழக்கு | : | தூர்வையும் வழி வாய்க்காலும் பாதை நிலமும் |
| வடக்கு | : | குறித்த படத்தில் துண்டு 3 என குறித்த பாதை நிலம் |
| மேற்கு | : | குறித்த படத்தில் துண்டு 1 எனக் குறித்த ஆதனம் |
| தெற்கு | : | புகையிரதநிலைய ஒதுக்கீட்டுக் காணி இதடங்கலும் இன்னும் குறித்த படத்தில் துண்டு 3 எனக் குறித்த 6.6குளி விசாலமான பாதையில் இதற்குரிய பாதையுரித்தும் |

மேற்குறித்த ஆதனத்தை வரதராசா இராஜலதன் மனைவி நிருபா ஜெயலக்ஸ்மி என்னும் பெயரில் ஆதனப் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் வரதராசா இராஜலதன் மனைவி நிருபா ஜெயலக்ஸ்மி பெயருக்கு ஆதஉரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப் பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்குப்பிர தேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்**
**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை. (கொல்லங்கலட்டி)**

(cs52732) (N-1)

## நானாட்டான் பிரதேச பண்பாட்டுப் பெருவிழா

மன்னார், நவ. 6 வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றின் நிதியனுசரணையுடன் நானாட்டான் பிரதேச செயலகம் மற்றும் நானாட்டான் பிரதேச கலாசாரப்பேரவை இணைந்து நடத்திய நானாட்டான் பிரதேச பண்பாட்டுப்பெருவிழா கடந்த வெள்ளிக்கிழமை நானாட்டான் பிரதேச செயலகத்தின் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் வேலாயுதம் சிவராஜா, சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை கல்வி அதிகாரியும் எழுத்தாளரும் ஆய்வாளருமான எஸ். டேவிட் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில்நாட்டுக்கூத்து, வில்லுப்பாட்டு, உள்ளிட்ட பாரம்பரிய கலை நிகழ்வுகள் நடைபெற்றன. தொடர்ந்து பாடசாலை மட்டங்களில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து சிறப்பு அம்சமாக மூத்த கலைஞர்கள், வளர்ந்து வரும் கலை மற்றும் சமூகப் பணி ஆர்வலர்கள் விருதுகள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.

(ச-60,213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றேன்

Easter Wishes



தேசிய மட்ட கல்வி அமைச்சும் ( Sir John Tarbat School Championship 2023) மற்றும் பாடசாலை மெய்வல்லுனர் சம்மேளனமும் இணைந்து நடத்தும் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான தேசிய தடகளப்போட்டியில் வெற்றிபெற்ற வீராங்கனை

## செல்வி க. சப்திகா

அவர்களுக்கு எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் பெருமிதம் கொள்கிறேன். வடமாகாணத்தின் முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலய மாணவி **க. சப்திகா** அவர்கள் பின்தங்கிய குடும்பப் பின்னணியில் இருந்து அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் பல சிரமத்தினை எதிர்நோக்கி தன் விடா முயற்சி மற்றும் தன்னம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டு வெற்றிவாகை சூடியுள்ளார். வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்.





விடாது முயற்சி செய்தால் வெற்றி கிட்டுவது நிச்சயம் என்பதை இக்கட்டான பல தடைகளைத் தாண்டி கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்ற 12 வயது சிறார்களுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவிற்கான தடகளப் போட்டியில் 1.32m பாய்ந்து வரலாற்றுச் சாதனை படைத்து தங்கம் வென்றது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. அவருக்கு வாழ்த்துக்கள். வரும் ஆண்டுகளில் அவர் தொடர்ந்து சிறந்து விளங்குவார் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

மாணவர்களின் வெற்றியே ஆசிரியர்களின் சாதனை என்பதை மீண்டும் நிரூபித்த ஆசானை பாராட்டுவது இன்றியமையாதது.

**"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணியராகப் பெறின்"**

என்னும் குறளுக்கிணங்க தான் நினைத்ததை நிறைவேற்றுவதற்காக
தன் மாணவியரை ஊக்குவித்து இப்பெருமையை ஈட்டித்தந்த **ஆசிரியர் திரு.வினோ** அவர்களுக்கும் எனது உளம்கனிந்த நன்றிகளும் வாழ்த்துக்களும்.
மேலும் பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் பங்களிப்புச்செய்த ஆசிரியர்களுக்கும் ஆச்சரியமூட்டும் செயல்களால் அழைத்தலை ஆழப்படுத்த வாழ்த்துகின்றேன்.

Easter Wishes

**செல்வராசா சிவனேஸ்வரன் (சிவா )**
**கொக்குத்தொடுவாய் (ஜேர்மனி)**

(CS 26850)A-1

# மரண அறிவித்தல்

## திருமதி கிறேஸ் நவரஞ்சிதமலர் சற்குணசிங்கம்

**(கிறேஸ் டீச்சர் / மலர் அக்கா),**
**(ஓய்வுபெற்ற ஆசிரியர் - கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, மற்றும் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி/ Former Manageress சுண்டுக்குழி மகளிர் கல்லூரி)**



கோப்பாய் மத்தி கோப்பாயினை பிறப்பிடமாகவும் கொழும்பு பாமன்கடையினை வதிவிடமாகவும் கொண்ட கிறேஸ் நவரஞ்சிதமலர் சற்குணசிங்கம் அவர்கள் கடந்த (03.11.2023) வெள்ளிக்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான S.V. சின்னப்பா. ரெபேக்கா சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும். காலஞ்சென்றவர்களான வைரமுத்து. தங்கமுத்து தம்பதியரின் மருமகளும். காலஞ்சென்ற சற்குணசிங்கத்தின் பாசமிகு மனைவியும். காலஞ்சென்றவர்களான வண A.C. துரைராஜா. A.C. செல்வராஜா. A.C. ஜெய ராஜா. A.C.முத்துராஜா. திருமதி மேசி ரட்ணமணி இராஜநாயகம். A.C.கனகராஜா. திருமதி ரோசலின்ட் ராசமலர் தம்பிஜயா ஆகியோரின் சகோதரியும், வனஜா (ஓய்வுபெற்ற ஊழியர் Official Languages Department.). தேவானந்தன் (ஓய்வுபெற்ற ஊழியர். தொழில்நுட்ப கல்லூரி. வட்டுக்கோட்டை). தேவரஞ்சன் (ஓய்வுபெற்ற ஊழியர். Commercial Bank-Jaffna) மற்றும் காலஞ்சென்ற சற்குணன் (பொபி UK). தேவகி (UK). தேவபிரேமன் (UK). தேவசேயன் (UK) ஆகியோரின் தாயாரும். மனோரஞ்சிட் (ஓய்வுபெற்ற ஊழியர் NERD). நாளினி (ஓய்வுபெற்ற ஊழியர் Bank of Ceylon, Jaffna). மீரா (முன்னாள் ஊழியர் Commercial Bank - Jaffna). ஜமுனா (UK). டேவிட் (UK). நிலானி (UK). நளினி (UK) ஆகியோரின் மாமியாரும், மேலும் Dr.கிறிஸ்டின் மிர்னாலினி (UK). றிச்சட் (John Keels). ரவீன் (MAS KREEDA Vaanavil). லக்ஷிதா (ஆசிரியர் வேலணை மத்திய கல்லூரி). Christopher (UK). Joel (UK), Davina (UK), Jason (UK), Joanna (UK), Mitthun (UK), Shagarie (UK), Mitthusha (UK) ஆகியோரின் பேர்த்தியும். Theo, Joshua, Joshika, Deborah, Olivia, Joel, Caleb, Chiara ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் உடலம் நாளை (07.11.2023) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் கோப்பாய் பரி.கன்னிமரியாள் ஆலய மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 2.00 மணியளவில் இறுதி நல்லடக்க ஆராதனை இடம்பெற்று. உடல் இராச வீதியில் அமைந்துள்ள பரி.கன்னிமரியாள் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
29 . 11 . 1940



மறைவு
06 . 11 . 2022

அமரர் **அன்ரன் சந்தியாப்பிள்ளை**
**(Doctor Anton)**

ஆண்டு ஒன்று ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம் உங்கள் திருமுகம் காணாமல்

நினைவு என்ற காற்றசைய எங்கள் நெஞ்சில்
எழும் அனலொடு - உன் நினைவுகளைச்
- சுமந்தபடி நிற்கின்றோம்

தாமின்றி தனியாக என் செய்வேன் என் தந்தையே
தம்பாசத்தின் வெள்ளத்தில் இறைவனும் அகப்பட்டானோ
தமை புவியில் விட மனமின்றி தன்னுடன் இணைத்தானோ

40, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தையிட்டிப் போராட்டம்; நீதிமன்றம் கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், நவ. 6

தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் போராட்டத்தை முன்னெடுத்து வரும் நிலையில் அதற்கு கட்டுப்பாடுகளை மல்லாகம் நீதிமன்றம் விதித்து கட்டளை பிறப்பித்துள்ளது.

தையிட்டி விகாரையில் இன்றும் விசேட நிகழ்வுகள் நடைபெறவுள்ள நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்று முன்தினம் மாலைமுதல் எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். இந்நிலையில், எதிர்ப்புப் போராட்டத்துக்குக் கட்டுப்பாடுகளை விதித்து மல்லாகம் நீதிமன்ற நீதிவான் காயத்திரி சைலவன் கட்டளை பிறப்பித்துள்ளார்.

சட்டத்தரணி காந்தீபன், சட்டத்தரணி க. சுகாஷ், நாடாளுமன்ற உறுப்பினர் பொன்னம்பலம் கஜேந்திரகுமார், செல்வராஜா கஜேந்திரன் மற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு என அடையாளப்படுத்தப்பட்டுள்ள கட்டளையில், திஸ்ஸ விகாரையில் 'கஜினமகா உற்சவம் நடைபெற இருப்பதாகவும் அதற்கு தங்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆர்ப்பாட்டத்தில் குழப்பம் ஏற்படுத்தப்படும் வாய்ப்புகள் இருப்பதாகவும் மேலும், தமிழ், சிங்கள மக்களிடையே இனவாதத்தைத் தூண்டக்கூடிய வாய்ப்புகள் உள்ளதாகவும் மன்றுக்கு அறிக்கையிடப்பட்டு குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் பிரிவு 106 இன் கீழ் தங்களுக்கெதிராக அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தக்கூடாது என்ற கட்டளையை வழங்குமாறு பலாலிப் பொலிஸாரால் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது.

குறித்த விண்ணப்பம் மற்றும் அறிக்கை என்பவற்றில் கவனம் செலுத்தி 5 ஆம் திகதியும் 6 ஆம் திகதியன்றும் திஸ்ஸ மகாவிகாரைக்கு அண்மையில் சொத்துகளுக்கோ அல்லது ஆள்களுக்கோ ஆபத்துகள் எவையும் ஏற்படக்கூடாது என்ற கரிசனையின் மீது மன்றால் கட்டளையாக்கப்படுகின்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்கள் திஸ்ஸ விகாரையில் நடைபெறவிருக்கும் கஜினமகா உற்சவத்துக்கு தடைகளோ குழப்பங்களோ ஏற்படுத்தக்கூடாது. ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசமைப்பின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை அனுபவிக்கையில் அமைதிக்குப்பாதகம் ஏற்படுத்தும் வகையிலோ அல்லது சொத்துகளுக்கோ அல்லது ஆள்களுக்கோ ஏற்படுத்தும் வகையில் செயற்படக்கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளர் க.சுகாஷ் 'நீதிமன்ற கட்டளையை மதிக்கத்தயார். ஆனால், பொலிஸாரின் சட்டவிரோத உத்தரவுகளுக்குக் கட்டுப்படமுடியாது. நீதிமன்றக் கட்டளைக்கு அமைவாகப் போராட்டம் தொடரும்' எனத் தெரிவித்தார்.

(அ-ஓ-100)

## யாழ். இளைஞன்...

இளைஞனின் சடலத்தில் காயங்கள் காணப்படுவதாகவும், ஆனால் உயிரிழப்புக்கான காரணம் கண்டறியப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-ஓ.100)

## ரூ.10 லட்சம்...

கள் அபகரித்துச் சென்றுள்ளனர். நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வீட்டில் வயோதிபத்தாய் அவரு | மகளுடன் மற்றுமொரு பெண் ஆகியோர் இருந்தவேளை முகமூடி அணிந்த இருவர் கத்தியுடன் வீட்டுக்குள் நுழைந்துள்ளனர். அங்கிருந்தவர்களை கத்திமுனையில் அச்சுறுத்தி, வீட்டிலிருந்த பணம், நகை மற்றும் மோட்டார் சைக்கிள் என்பனவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். (அ-ஓ-19)

## வர்த்தகர்...

அந்த வீட்டில் அந்தியேட்டிக் கிரியை நேற்றுநடைபெறவிருந்தநிலையிலேயே இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை மூன்று மணியளவில் சமையல் வேலைக்காக எழுந்த குடும்பத்தினர் 'சார்ஜ்' போடுவதற்கு கையடக்கத் தொலைபேசியைத் தேடிய போது அதனைக் காணவில்லை. இதன் பின்னர் வீட்டிலுள்ள அலுமாரி மற்றும் கதவு என்பன திறந்த நிலையில் காணப்பட்டுள்ளது. இதனால் பதறிப்போன வீட்டார் உடனடியாக தங்கள் நகைகள் வைக்கப்பட்டிருந்த இடத்துக்கு ஓடிச் சென்று பார்த்தபோது, அங்கிருந்த நகைகள் யாவும் திருடிச் செல்லப்பட்டு விட்டதை அறிந்து, அதிர்ச்சியடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாகப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வீட்டாருடன் நெருங்கிய தொடர்புடைய வர்களுக்கு இந்தச் சம்பவத்துடன் தொடர்பு உள்ளதா? என்ற கோணத்திலும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ஓ-26)

## விபத்துக்குள்ளான...

அது தற்போது மீட்கப்பட்டு கரைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

திருகோணமலையைச் சேர்ந்த பல நாள் படகு ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பருத்தித்துறை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த போது கடற்பா றையில் மோதி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து மூழ்கிய நிலையில் பருத்தித்துறை துறைமுகத்தை நோக்கி செலுத்திவரப்பட்டபோதிலும் துறைமுக கடற்பரப்பில் தரைதட்டியுள்ளது.

இதையடுத்து தரைதட்டிய படகை கயிறு மூலம் இணைத்து இராணுவ வாகனத்தைக் கொண்டு இழுத்து கரை சேர்க்கப்பட்டுள்ளது. (அ-ஓ-100)

## மட்டக்களப்புக்கு...

டுள்ளது. யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றிணைந்து, உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மயிலத்தமடு பண்ணையாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து நேற்றுக் காலை 9 மணிக்கு சித்தாண்டி முருகன் ஆலயத்துக்கு முன்னால் ஒன்று கூடினர். பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பண்ணையாளரின் இடம் வரை, மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலமாகச் சென்று அங்கும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்தப் பகுதியில் கலகம் அடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டு பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் போராட்டம் நடைபெற்றது. அந்தப் போராட்டம் முடிவுற்ற பின்னர் மாணவர்கள் பேருந்தில் கிழக்குப் பல்கலைக்கழகத்தை நோக்கிப் பயணித்தபோது பின்னால் சென்ற சந்திவெளிப் பொலிஸார் பல்கலைக்கழகத்துக்கு அருகாமையில் வைத்து பேருந்தை நிறுத்தி அதிலிருந்த 6 மாணவர்களைக் கைது செய்துள்ளனர்.

சட்டவிரோத ஆர்ப்பாட்டம் மற்றும் வீதிப் போக்குவரத்துக்கு இடையூறு விளைத்த குற்றச்சாட்டின் கீழ் இவர்கள் கைதாகினர். மாணவர்கள் பின்னர் மருத்துவப் பரிசோதனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அதன் பின்னர் ஏறாவூர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது 6 மாணவர்களுக்கும் பிணை வழங்கப்பட்டதுடன் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பிணைக்கு ஒப்பமிடவேண்டும் எனவும் நீதிமன்றால் கட்டளையிடப்பட்டது.

இதற்கிடையில் 6 பேரையும் பொலிஸார் மட்டக்களப்பு சிறையில் அடைத்துள்ளனர். நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் , சிறையில் அடைக்கப்பட்ட பல்கலை மாணவர்கள் இன்று திங்கட்கிழமையே விடுவிக்கப்படவுள்ளனர்.

(அ-ஓ-26-27-125)

## தமிழரசு...

ஜனவரி மாதம் 21 ஆம் திகதி கட்சியின் தலைவர் மற்றும் நிர்வாகக் குழு தெரிவு என்பனவும் நடைபெறவுள்ளன.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் 21பேருடன் வவுனியாவில் நேற்று நடைபெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நேற்றைய கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனின் கடிதம் வாசிக்கப்பட்டது.

அதன் பின்னர், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உள்விவகாரங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிப்பது தொடர்பாகவும் நேற்று ஆராயப்பட்டுள்ளது. நேற்றுமுதல் கட்சி தொடர்பாக எவரும் எந்தவொரு ஊடகத்துக்கும் கருத்து தெரிவிக்கக்கூடாது. அவ்வாறு தெரிவிக்க வேண்டுமாயின் கட்சித் தலைமையின் அனுமதியுடனேயே கருத்துத் தெரிவிக்க முடியும். அதை மீறுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கட்சியின் மூலக்கிளை, தொகுதிக் கிளைத் தெரிவுகள், கூட்டங்கள் நடத்தப்படாவிட்டாலும் அடுத்த ஆண்டு ஜனவரி 28 ஆம் திகதி திருகோணமலையில் கட்சியின் மாநாடு நடைபெறும். அதற்கு முன்னதாக இம்முறை தலைமைக்கு போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப்படுவதால், நிர்வாகத் தெரிவுகள் 21ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறும். 27ஆம் திகதி பொதுச்சபை மீண்டும் கூடும். 28ஆம் திகதி மாநாடு நடைபெறும்.

இந்த மாநாட்டுக்காக இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் உள்ளூராட்சிச் சபையில் உறுப்பினர்களாக இருந்தவர்கள் 2 ஆயிரம் ரூபாவும், உள்ளூராட்சிச் சபைத் தலைவர்களாக இருந்தவர்கள் 5 ஆயிரம் ரூபாவும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு இலட்சம் ரூபாவும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் 50 ஆயிரம் ரூபாவும், மாகாணசபை முன்னாள் உறுப்பினர்கள் 25 ஆயிரம் ரூபாவும் வழங்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ஓ-5)


**காணி, கடை, கட்டடத்துடன் காணி விற்பனைக்கு உள்ளன**

1. பலாலி வீதி, திருநெல்வேலி சந்தியிலிருந்து வடக்கு பக்கமாக 100 மீற்றர் தூரத்தில் பிரதான வீதியில் அமைந்துள்ள காணி 5 1/4 பரப்பும் பாரிய களஞ்சியமும் சேர்த்து விற்பனைக்கு உள்ளது.
2. K.K.S. வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள களஞ்சிய வசதியுடன் கூடிய கடை விற்பனைக்கு உள்ளது.
3. A-9 வீதி, திருமுறுகண்டியில் பிரதான வீதியுடன் அமைந்துள்ள ஒரு ஏக்கர் காணியும் பாரிய கட்டடம் உணவகம் என்பன விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு:-

077 3866 250

(CR 40940) A-1



**மரண அறிவித்தல்**



தோற்றம் 16 . 08 . 1969

மறைவு 05 . 11 . 2023

**சிவானந்தம் ஸ்ரீதர்**

**Accountant (Zanda Mesh Industries (Pvt) Ltd.**

அத்தியடியைப் பிறப்பிடமாகவும் கலைமன்ற வீதி, புலோலி வடக்கு பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னார் சிவானந்தம் திலகவதி தம்பதியரின் பாசமிகு புதல்வனும், அமரர்களான குலேந்திரம் சூரியகுமாரி தம்பதியரின் அன்பு மருமகனும், ஸ்கந்தவாணியின் அன்புக் கணவரும், ஹரிணி, பாவனி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சுமதி (கனடா), சுதாகர் (லண்டன்), சுரேஷ் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஸ்கந்தபாபு-வாசுகி, ஸ்கந்தவேணு - குமுதினி, ராமச்சந்திரன் (கனடா), சாமினி (லண்டன்), வாசுகி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2023) திங்கட்கிழமை ந.ப. 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணிக்கு கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைமன்ற வீதி, புலோலி வடக்கு, பருத்தித்துறை. தகவல்: குடும்பத்தினர். 077 3149 123

(CR 40939) A-1


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வடக்கு...

வடக்கு மாகாணத்துக்கு 3 நாள் பயணமாக சீனத் தூதுவர் தலைமையிலான குழுவினர் வருகை தந்துள்ளனர். வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டச் செயலகங்களில் நேற்று இடம்பெற்ற உதவி வழங்கும் நிகழ்வில் பங்கேற்ற அவர்கள் இன்றையதினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர்.

வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்த தூதுக் குழுவினருக்கு; தமிழர் பாரம்பரிய முறைப்படி தடல்புடலான வரவேற்பு ஒழுங்குகள் மாவட்டச் செயலகங்களால் வழங்கப்பட்டன.

வவுனியா மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற உதவி வழங்கும் நிகழ்வில் உரையாற்றிய தூதுவர்;

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவு என்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நீண்டகால உறவாகும். இலங்கையில் உள்ள மக்கள் எப்படியான சவால்கள் மற்றும் பிரச்சினைகளை எதிர்நோக்கினாலும் அதற்குத் தீர்வு காணும் வகையில் சீனா அரசாங்கம் கடந்த காலத்திலும், தற்காலத்திலும் செயற்படுவதுடன், எதிர்காலத்திலும் அதற்காகச் செயற்படும். சீனா எப்பொழுதும் உங்களோடு கைகோர்த்து நிற்கும். கொவிட் பெருந்தொற்றுக் காலத்தில் இலங்கைக்கு சீன அரசாங்கம் 'சினோபார்ம்' தடுப்பூசி மருந்தை வழங்கியிருந்தது.

இலங்கை அரசாங்கம் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு சீனா எப்பொழுதும் உதவும். பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை மீள்வதற்காக முதன் முதலாக இலங்கையுடன் உடன்படிக்கை செய்து கொண்ட நாடு சீனா தான். இந்த உடன்படிக்கையைச் செய்வது தொடர்பில் சில பிரச்சினைகள் கூட காணப்பட்டன.

இலங்கை மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற சீன அரசாங்கம் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளது. 500 குடும்பங்களுக்கு வவுனியாவில் நிவாரணப் பொதிகளைவழங்க ஏற்பாடு செய்துள்ளோம். ஒவ்வொன்றும் 7 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியானவை. கடந்த காலங்களில் சீனத் தூதரகத்தின் மூலம் நீர் சுத்திகரிக்கும் இயந்திரங்களை வடமாகாணத்தில் வழங்கியிருந்தோம்.

நாங்கள் எங்களது சகோதர, சகோதரிகளுக்கு உதவுவதில் அக்கறை கொண்டுள்ளோம். சீன அரசாங்கம் 155 மில்லியன் ரூபாவை வடக்கு மாகாணத்தில் செலவு செய்யவுள்ளது. அதில் நிவாரணப் பொதிகள் வழங்குவது மட்டுமன்றி மீன்பிடி வலைகள் வழங்குவதற்கும் பயன்படுத்தவுள்ளோம். மிகுதிப் பணத்தில் வடமாகாணத்தில் வீடு அமைத்து கொடுக்கத் திட்டமிட்டுள்ளோம். நாங்க்ள் தற்போது இலங்கை மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் இருந்து விடுபட உதவ முன்வந்துள்ளோம். அவர்கள் எதிர்காலத்தில் சந்தோசமான வாழ்க்கையை வாழ்வார்கள் என நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம் - என்றார். (அ-ஒ-18)

## அஸ்வெசும...

இது தொடர்பில் விடுத்துள்ள ஊடக அறிவிப்பில்;

அஸ்வெசும திட்டத்தின் தெரிவுப் பட்டியல்கள் வெளியிடப்பட்டு, தனிநபர்களிடமிருந்து மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் பெறப்பட்டு பல மாதங்கள் கடந்துவிட்டன. ஆனால், அஸ்வெசும திட்டத்தை நடைமுறைப்படுத்திய கணினி தரவு அமைப்பில் உள்ள தொழில்நுட்ப சிக்கல்கள் உட்பட பல காரணிகளால், மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் விசாரணைகள் நடத்தப்பட்டு முடிக்கப்படவும், பயனாளிகளின் வங்கிக் கணக்குகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்கவும், எழுந்துள்ள பிற பிரச்சினைகளைத் தீர்க்கவும் முடியாதுள்ளது. இந்நிலைமை தொடர்பில் பிரதேச செயலர்களால் பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டும் நலன்புரி நன்மைகள் சபை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண போதிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

கணினி அமைப்பில் உள்ள தொழில்நுட்பப் பிரச்சினைகள் மற்றும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் உள்ள ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணாமல் 'அவஸ்வெசும வாரம்' பிரகடனம் செய்வதன் மூலம் பயனாளிகள் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன் பிரதேச செயலர்களுக்கு இல்லை. எனவே, அஸ்வெசும வாரத்துடன் தொடர்புடைய கடமைகளைச் செய்வதிலிருந்து பிரதேச செயலர்கள் விலகி இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். 'அஸ்வெசும' உதவித் திட்டத்துக்கு விண்ணப்பித்த அனைத்து பொதுமக்களும் தமது பிரச்சினைகளைத் தீர்க்க, பிரதேச செயலக அலுவலகங்களுக்கு வரவேண்டாம் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும், நலன்புரிப் பலன்கள் வாரியம் தற்போதுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்த பிறகு, மேன்முறையீடுகள், எதிர்ப்பு விசாரணைகள் உட்பட மீதமுள்ள அனைத்துப் பணிகளையும் செய்து முடித்து, பயனாளிகள் அனைவருக்கும் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு பிரதேச செயலர்கள் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். இந்த நடவடிக்கை குறித்து நலன்புரி நன்மைகள் சபை உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (அ-ஒ-5)

## பல்கலை...

ஈடுபடும் சந்தேகநபர் ஒருவரின் காணொலி வெளியிடப்பட்டுள்ளது.

சில நாட்களுக்கு முன்னர் ஆத்திசூடி வீதியில் மோட்டார் சைக்கிளில் ஆணுறுப்பை காட்டியவாறு பல்கலைக்கழக மாணவியை பின்தொடர்ந்தவரை, பல்கலைக்கழக மாணவி துணிகரமாக காணொலி பதிவு செய்துள்ளார். காணொலி எடுக்கப்படுவதை அவதானித்த நபர் மோட்டார் சைக்கிளைத் திருப்பி கொண்டு சென்றுவிட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவிகள் விரிவுரைகளை முடித்துவிட்டு பல்கலைக்கழக விடுதிகளுக்கும் தங்குமிடத்துக்கும் நடந்து செல்லும் போதும் வீதியால் வருகின்ற ஒரு சிலர் இவ்வாறு ஆணுறுப்பைக் காட்டி பாலியல் சைகைகளை செய்கின்றமை அதிகரித்து வருவதாக குற்றம் சுமத்தப்படுகின்றது. (அ-ஒ-26-27)

## 100 கோடி...

பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமேதாஸ தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சீனி மீது 25 சதமாக இருந்த வரி, தற்போது 50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்து. வரி அதிகரிப்புக்கு முன்னர் 2 இலட்சத்து 24 ஆயிரம் மெற்றிக் தொன் 25 சத வரியில் சந்தைக்கு விடப்பட்டதன் காரணமாக அரசாங்கத்துக்கு 100 கோடி ரூபா வரி வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. சீனி மாபியாவில் அங்கம் வகிக்கும் கூட்டாளிகளைப் பாதுகாக்க அரசாங்கம் செயற்பட்டுள்ளது. இது போன்ற மோசடிகளுக்கு இடமளித்திருப்பது எதிர்காலத் தேர்தல்களில் ஆதாயம் அடையவா? என்ற சந்தேகம் எழுகிறது. இந்த வரி மோசடியில் அரசாங்கத்தின் தலையீடு நேரடியாகவே இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் முறையான விசாரணைகள் நடத்தப்பட்டு மீண்டும் வரி விதிக்கப்பட வேண்டும் - என்றார்.

(அ-ஒ-இ)


## மரண அறிவித்தல்



### நித்தியானந்தம் சுரேஸ்குமார்

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும், 336, ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட நித்தியானந்தம் சுரேஸ்குமார் கடந்த (04.11.2023) சனிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நித்தியானந்தம் சுப்புலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், யோகேஸ்வரன் (சந்திரன்), புஸ்பராணி ஆகியோரின் மருமகனும், துளசியாவின் அன்புக் கணவரும், நிந்துஜா, அபிணஜா, பவித்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருநிதி, ராஜ்குமார், சுதாகரன், ராஜ்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவமூர்த்தி, புஸ்பகலா, பிரியா, சுஜாதா, தனுசியா ஆகியோரின் மைத்துனரும், தயாபரனின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**336, ஆனைப்பந்தி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**T.P:076 7010 239**

(CS 26853)A-1



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- பிரதான இராசபாதையும் G.P.S. விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 4 பரப்பாகவும், 3 1/2 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- திருமண மண்டபங்கள் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் வீடுகள், கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று.
- இக் காணியில் இருந்து கல்வியங்காடு பிரதான சந்தை 1 1/2 km.
  திருநெல்வேலி பிரதான சந்தை 1 1/2 km.
  நல்லூர் கந்தசாமி ஆலயம் 2 km.
- திருநெல்வேலி நொதேன் வைத்தியசாலை 2 km.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம்:-

காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

**தொடர்புகளுக்கு:- ஜெயம்**

**077 814 7389**

**077 986 5457**

(CS 26820) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரசாலை பொதுநூலக வாசிப்புமாத போட்டிகள்

யாழ்ப்பாணம், நவ. 6

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி சாவகச்சேரி பிரதேசசபையின் சரசாலை பொதுநூலகத்தால் பாடசாலை மாணவர்களிடையே கற்றல்போட்டிகள் நடத்தப்படுகின்றன.

ஆரம்பப் பிரிவு தொடக்கம் உயர்தரம் வரையிலான மாணவர்களுக்கு சித்திரப் போட்டிகள், திருக்குறள் போட்டிகள், வாசிப்பு, கட்டுரை, தமிழறிவு வினாவிடை, கவிதை ஆக்கம், சிறுகதை ஆக்கம், ஆங்கிலப்பேச்சு, கதைகூறல் உள்ளிட்ட போட்டிகள் நடத்தப்படுகின்றன என்று பொதுநூலகத்தின் நூலகர் வ.சிவானந்தம் தெரிவித்தார். (ச)


நாளையுடன் விண்ணப்ப பதிவுகள் நிறைவடைகின்றன
இறுதி சந்தர்ப்பம் - தவறவிடாதீர்கள்

அமெரிக்க லொத்தர் இலவச விசா

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

2024ல் நீங்களும் அமெரிக்காவில்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

V2 Travels

0768226244
0768226241

ENGLISH / TAMIL மொழிபெயர்ப்பாளர்கள்
அலுவலக ஊழியர்கள்

VACANCY

யாழ். பிறவுண் வீதியில் உள்ள நிறுவனம் ஒன்றிற்கு English or தமிழில் தட்டச்சு செய்யக் கூடிய (Computer Typing) அலுவலக ஊழியர்கள் தேவை.
சம்பளம் 40,000 +

தொடர்புகளுக்கு:
0777 111 444

அமெரிக்க லொத்தர் விசா

இன்னும் 02 நாட்கள் மட்டுமே

* பதிவுகளை மேற்கொள்ளுங்கள்
* அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, Jaffna. T.P: 0777 55 45 28

பனம் பழம் தேவை

30 ரூபா வீதம் பனம்பழம் உங்கள் இடங்களுக்கு வந்து கொள்வனவு செய்யப்படும். சேகரித்து தரக்கூடியவர்களும் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:
0777 157 070

தரமான காணி விற்பனைக்கு

GOLDEN Real Estate

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 60 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

* 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
* நிலப்பரப்பு, நன்னீரூற்று
* 18 அடிப்பாதையுடன்
* வட மாகாணசபை, சித்த மருத்துவமனை ஆகியவற்றிற்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
* யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
* மிகவும் நல்ல சூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணி
* வீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் உகந்த இடம்.
* பரம்பரைக்காணி, பலவருடகால தோம்பு, தூய உறுதி.
* தரகர் தேவையில்லை.

பார்வையிடும் நேரம்: காலை 6.00 - மாலை 6.00 மணிவரை
1 பரப்பின் விலை 24 லட்சம்

Golden Real Estate (Pvt) Ltd.
Director & Owner :- T.Kalaithasan
077 468 3354, 076 755 8606, 077 288 0152

(CS 26826) A-1

IELTS Academic General UKVI

#Student VISA
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 18)

DMI COMPUTER EDUCATION 0777 17 35 17

A1 IELTS Life Skills
திருமணம் செய்து UK செல்வோருக்கானது

B1 Skilled Worker Visa
மூலம் வெளிநாடு செல்வோருக்கானது

DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்

DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH

புதிய பிரிவு ஆரம்பம்
6/11/2023-MON
11/11/2023-SAT
9 am or 3 pm

German - Germany ,Swiss நாட்டுக்கு செல்வோருக்கு Deuctsch
French - France நாட்டுக்கு செல்வோருக்கு

DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் 0777 24 07 07 021 222 4403

021 226 2470 0777577333
சாவகச்சேரி 021 227 0775 0777227074
021 224 1970 0776032300
021 225 6665 0761354503
கிளிநொச்சி 021 228 5655 0776398096

சுருட்டு சுற்றும் உரிமம் [LICENSE] தேவை

சுருட்டு சுற்றும் உரிமம் (LICENSE) தேவை. புதுப்பிக்க படாத / காலாவதியான / நடைமுறையில் உள்ள LICENSE கொள்வனவு செய்யப்படும். பல வருடங்கள் பழமையானது என்றாலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

077 433 4826


# மரண அறிவித்தல்

பிறப்பு 1948.10.26

## திருமதி மயில்வாகனம் செல்வதி

இறப்பு 2023.11.05



வேலணை கிழக்கு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல.17 சந்தன மாதா கோவில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மயில்வாகனம் செல்வதி அவர்கள் நேற்று (05.11.2023) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து இராசம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற இராசன் மயில்வாகனத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசன் - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மல்லிகாதேவி மற்றும் தெய்வேந்திரம், நீலாவதி, இராமச்சந்திரன், மனோகரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிறிதரன் (கொழும்பு), சிறிவாணி (ஜேர்மன்), சிறிகாந், சிவாநந்தி மற்றும் வாகீசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ருபின்சலா (கொழும்பு), பிரபாகரன் (ஜேர்மனி), சந்தியா, தர்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், யஸ்மிதன், யசிதன், வேதிகா, ரிசோக், தட்ஜா, நதீசா, விசாகன், ஆதீரன், றனோசிகன், தட்சாஜினி, சயிந்தன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.11.2023) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மதியம் 12.00 மணியளவில் துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 26848) A-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org